தினமணி

## 100 டன் மகசூல் பெற வேளாண்துறை தீவிரம்

First Published : 14 May 2012 02:42:35 PM IST

திருச்செங்கோடு, மே 13: கரும்பில் ஏக்கருக்கு 100 டன் மகசூல் பெறலாம் என்று அறிவித்துள்ள வேளாண் துறை இதனை விவசாயிகளுக்கு செயல் விளக்கம் செய்து காட்ட முனைந்துள்ளது.

இது குறித்து பள்ளிப்பாளையம் வேளாண் உதவி இயக்குநர் முரளீதரன் கூறியது:

கரும்பு சாகுபடியில் மகசூலை அதிகரிக்கும் வகையில் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் நீடித்த நவீன கரும்பு சாகுபடி முறைக்காக வேளாண் துறை மற்றும் பொன்னி சர்க்கரை ஆலையின் மானியத்துடன் பள்ளிப்பாளையம் வட்டாரத்தில் 20 நிழல் வலை நாற்றங்கால்கள் அமைக்கும் பணி சர்ககரை ஆலை மூலம் நடந்து வருகிறது.

முதல் கட்டமாக கொக்கராயன்பேட்டை பொன்னுசாமி என்பவரது வயலில் நிழல் வலை நாற்றங்கால் அமைக்கப்பட்டது.

வேளாண் இணை இயக்குநர் பிரபாகரன் மற்றும் பொன்னி சர்க்கரை ஆலைத் தலைவர் சந்திரமெப்லி நாற்றங்காலை தொடக்கி வைத்து விவசாயிகளுக்கு நாற்றுக்களை விநியோகம் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து நடந்த கலந்துரையாடலில் நவீன கரும்பு சாகுபடி மூலம் ஒற்றை நாற்றுக்களை சொட்டு நீர் பாசன முறையில் நடவு செய்தால் கரணைகளுக்கான செலவு குறைந்து அதிகரிக்கப்பட்ட உர மற்றும் நீர் பயன்பாட்டினால் அதிக ஒளி மற்றும் காற்றோட்டம் காரணமாகவும், ஒத்த எடையுள்ள தரமான கரும்பினை உற்பத்தி செய்து ஏக்கருக்கு 100 டன் மகசூல் அடைவது சாத்தியமே என்று விளக்கப்பட்டது.

இடை உழவு பணிகளுக்காக இயந்திரங்களை பயன்படுத்துவதன் மூலம் வேலையாட்கள் செலவு குறைக்கப்பட்டு நிகர லாபம் அதிகமாகும் என்றார் அவர்.

## பரமத்தி வேலூரில் வாழைத்தார் விலை வீழ்ச்சி

First Published : 14 May 2012 02:43:50 PM IST

பரமத்தி வேலூர்,மே 13: பரமத்தி வேலூர் வாழைத்தார் ஏல மார்க்கெட்டுக்கு வாழைத்தார்களின் வரத்து அதிகரித்துள்ளதால் வாழைத்தார் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

பரமத்தி வேலூர் வட்டத்தில் காவிரி கரையோரப் பகுதிகளில் பல ஏக்கரில் பூவன்,ரஸ்தாலி, கற்பூரவள்ளி, மொந்தன், பச்சைலாடன் உள்ளிட்ட வாழைகள் பயிர் செய்யப்பட்டுள்ளன. இங்கு

விளையும் வாழைத்தார்கள் தமிழ்நாட்டில் உள்ள பல மாவட்டங்களுக்கும்,ஆந்திர,கர்நாடகா,கேரளா உள்ளிட்ட மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன.

சமீபத்தில் திடீரென சூறாவளி காற்றால் பல இடங்களில் வாழைகள் ஒடிந்து போனது.

இதனால், வாழைத்தார் ஏல மார்க்கெட்டிற்கு அதிக அளவில் வாழைத்தார்கள் வரத் துவங்கியுள்ளன. ரூ.250-க்கு ஏலம் போன பூவன் வாழைத்தார் ரூ.170-க்கும், ரூ.250-க்கு ஏலம் போன ரஸ்தாலி ரூ.200-க்கும், ரூ.200-க்கு விற்ற பச்சலாடன் ரூ.130-க்கும், ரூ.200-க்கு ஏலம் போன கற்பூரவள்ளி ரூ.110-க்கும் ஏலம் போனது. ரூ.3-க்கு விற்பனையான மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ. 2-க்கும் விற்பனையானது.

ஏல மார்க்கெட்டிற்கு வாழைத்தார்களின் வரத்து அதிகரித்துள்ளதால், வாழைத்தார்களின் விலை குறைந்துள்ளதாக விவாசாயிகள் தெரிவித்தனர்.

## ஆடு வளர்ப்போர் கவனத்துக்கு...

First Published : 14 May 2012 02:17:12 PM IST

திருப்பூர், மே 13: திருப்பூரில் வெள்ளாடு வளர்ப்பு குறித்த கருத்தரங்கம் திங்கள்கிழமை நடைபெறுகிறது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், கால்நடை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில், தெற்கு ரோட்டரி சங்க அரங்கில் இக்கருத்தரங்கம் நடைபெறுகிறது.

கருத்தரங்கை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் வே. பாலகிருஷ்ணன் தொடங்கி வைக்கிறார்.

இதில், சிறந்த வெள்ளாடுகளைத் தேர்வு செய்யும் முறை, வெள்ளாடுகளின் தீவன மேலாண்மை, வெள்ளாட்டு இனங்கள், இனச்சேர்க்கை, ஆடுகளைத் தாக்கும் நுண்ணுயிரிகள், நச்சுயிரிகளால் ஆடுகளுக்கு ஏற்படும் நோய்கள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில், கால்நடை ஆராய்ச்சி மைய பேராசிரியர்கள் உரையாற்றுகின்றனர்.

ஆடு வளர்ப்பில் ஆர்வமுள்ள அனைவரும் கருத்தரங்கில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு திருப்பூர் கால்நடை பல்கலை. பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத் தலைவர் ராம. செல்வராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

## "ரூ.2.8 லட்சம் மானியத்தில் சூரிய சக்தி விவசாய பம்ப் செட்டுகளை அமைக்கலாம்'

First Published : 14 May 2012 11:18:23 AM IST

சிவகங்கை, மே 13: அரசு வழங்கும் ரூ. 2.8 லட்சம் மானியத்துடன் சூரியசக்தி விவசாய பம்ப் செட்டை அமைத்து, குறைந்தபட்சம் 25 ஆண்டுகள் பயன்பெறலாம் என்று தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவன துணைப் பொது மேலாளர் சையது அகமது தெரிவித்தார்.

சூரியசக்தி மூலம் இயங்கும் விவசாய பம்புகள், வீட்டு உபயோகப் பொருள்கள் ஆகியவை குறித்த செயல் விளக்கம், சிவகங்கை ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள சமுதாயக் கூடத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவன துணைப் பொது மேலாளர் சையது அகமது, கணினி மூலம் அது குறித்து விளக்கினார். அவர் கூறியதாவது:

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் தினமும் 3-5 மணி நேரம் மட்டுமே சூரிய ஒளி இருக்கும். ஐரோப்பாவின் ஆல்ப்ஸ் மலைப் பகுதி எப்போதும் பனி சூழ்ந்தே காணப்படும். ஆனால், அங்கே சூரிய ஒளி மின்சார தயாரிப்புக் கருவிகள் அமைக்கப்படுகின்றன. ஆனால், இந்தியாவில் தினமும் குறைந்தபட்சம் 12 மணி நேரம் சூரிய ஒளி அபரிமிதமாகக் கிடைக்கிறது. இதை நாம் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

விவசாயத்துக்குப் பயன்படும் 5 குதிரை சக்தி திறன் கொண்ட மோட்டார் பம்ப் செட்டை அமைக்க ரூ.8 லட்சம் செலவாகும். இதில் ரூ. 2.8 லட்சத்தை அரசு மானியமாக வழங்குகிறது. எஞ்சிய ரூ.5.2 லட்சத்தை விவசாயிகள் செலுத்தினால் போதும். இந்த தொகையையும் வெறும் 5 சதவீத வட்டியில் வங்கிகள் மூலம் சுலபமாகப் பெறலாம். வங்கிகள் இதற்காக 75 சதவீத தொகையை கடனாக வழங்கும்.

5 குதிரைத் திறன் சக்தி வரை உள்ள மோட்டார் பம்ப் அமைக்க மட்டுமே மானியம் உண்டு. அதற்கு மேல் திறன் கொண்ட அமைப்பை நிறுவ விரும்புபவர்கள் எஞ்சிய தொகையை தாங்களே செலவு செய்ய வேண்டும்.

இதேபோல வீடுகளுக்கு 1 கே.வி.ஏ. திறன் கொண்ட சூரிய ஒளி அமைப்பை நிறுவ ரூ. 2 லட்சம் செலவாகும். இதில் ரூ. 81 ஆயிரத்தை அரசு மானியமாக வழங்குகிறது. சூரிய ஒளி மின்சக்தி அமைப்புகளை நிறுவ 044-28224830 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

இந்நிகழ்ச்சிக்கு ஆட்சியர் வே.ராஜாராமன் தலைமை தாங்கினார். சிவகங்கை ஒன்றிய தலைவர் பாஸ்கரன், துணைத் தலைவர் சந்திரன், வேளாண்மை இணை இயக்குநர் தட்சிணாமூர்த்தி, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) முத்துகிருஷ்ணன், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் ராஜகோபால் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## தானிய கையிருப்பு 21 சதவீதம் வளர்ச்சி

மே 15,2012,00:52



புதுடில்லி:நடப்பு பயிர் பருவத்தில், மே மாதம் 1ம் தேதி வரையிலுமாக, நாட்டின் உணவு தானியங்கள் கையிருப்பு, 21 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது என, இந்திய உணவு கழகம் (எப்.சி.ஐ.) தெரிவித்துள்ளது. இந்திய உணவுக் கழகம், மாநில அரசுகளின் முகமை அமைப்புகள் ஆகியவை, விவசாயிகளிடமிருந்து உணவு தானியங்களை கொள்முதல் செய்து, அவற்றை சேமித்து வைத்து, பொது வினியோகத் திட்டத்தின் கீழ் குறைந்த விலையில் வழங்கி வருகின்றன. இந்த வகையில், நடப்பு பருவத்தில், சென்ற 1ம் தேதி வரையிலுமாக, உணவு தானியங்கள் கையிருப்பு, 7.12 கோடி டன்னாக அதிகரித்துள்ளது.

இது, இதற்கு முந்தைய பருவத்தின், இதே காலத்தில் இருந்ததை விட, 21 சதவீதம் (5.92 கோடி டன்) அதிகமாகும்.மதிப்பீட்டு காலத்தில், கோதுமை கையிருப்பு, 3.14 கோடி டன்னிலிருந்து, 3.82 கோடி டன்னாக உயர்ந்துள்ளது.

அரிசி கையிருப்பு, 2.87 கோடி டன்னிலிருந்து, 3.30 கோடி டன்னாக அதிகரித்துள்ளது.

நடப்பு பயிர் பருவத்தில், முன் எப்போதும் இல்லாத சாதனை அளவாக, நெல் உற்பத்தி, 10.35 கோடி டன்னாகவும், கோதுமை உற்பத்தி, 8.83 கோடி டன்னாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதையடுத்து, நெல் 3.50 கோடி டன்னும், கோதுமை 3.20 கோடி டன்னும் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## சர்க்கரை ஏற்றுமதி மீதான கட்டுப்பாடு நீக்கம்

மே 15,2012,01:39

புதுடில்லி:மத்திய அரசு, சர்க்கரை ஏற்றுமதி மீதான கட்டுப்பாட்டை நீக்கியுள்ளது. இதன்படி, சர்க்கரை உற்பத்தியாளர்கள், மறு அறிவிப்பு வரும் வரை, பொது உரிம அடிப்படையில், சர்க்கரை ஏற்றுமதி செய்து கொள்ளலாம்.இந்த அளவிற்கு தான், ஏற்றுமதி செய்து கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளதாக மத்திய உணவு அமைச்சகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.
நடப்பு 2011-12ம் சந்தைப்படுத்தும் பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்), நாட்டின் சர்க்கரை உற்பத்தி, உள்நாட்டு தேவையை விட, அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி அளித்துள்ளதால், சர்க்கரை ஆலைகள், விவசாயிகளுக்கு அளிக்க வேண்டிய, 10 ஆயிரம் கோடி ரூபாய் நிலுவை தொகை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
நடப்பாண்டு மார்ச் மாதம், 26ம் தேதி, மத்திய அரசின் முக்கிய அமைச்சரவை குழு, 10 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கியிருந்தது.அண்மையில், முடிவுற்ற சர்க்கரை பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.60 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், சர்க்கரை ஏற்றுமதிக்கான கட்டுப்பாட்டை நீக்குவதற்கு முன்பாக, மத்திய அரசு, 20 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.
தற்போதைய நிலையில், உள்நாட்டில் சர்க்கரைக்கான தேவை, 2.15 -2.20 கோடி டன் என்றளவில் உள்ளது. எனவே, சர்க்கரை ஏற்றுமதி மீதான கட்டுப்பாடு விலக்கி கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.
தேவையை விட, உற்பத்தி அதிகரித்துள்ளதால், நடப்பு சந்தைப்படுத்தும் பருவத்தில், 40 லட்சம் டன் ஏற்றுமதி செய்தால் கூட, அது உள்நாட்டில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என, சர்க்கரை உற்பத்தியாளர் சங்கம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.நடப்பாண்டு, ஏப்ரல் மாதம் வரையிலுமாக, 16 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. கடந்த 2010-11ம் சந்தைப்படுத்தும் பருவத்தில், மொத்தம் 31 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதியானது என்பது குறிப்பிடத்தக்கது

## பாமாயிலில் ஊடுபயிர் செய்த "எள்' அமோக விளைச்சல்

பதிவு செய்த நாள் : மே 15,2012,02:14 IST

விழுப்புரம் : விழுப்புரம் அருகே பாமாயில் செடியில் ஊடுபயிர் செய்துள்ள எள் அமோ கமாக விளைந்து அறுவடைக்கு தயாராக உள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் தற்போது பாமாயில் எண்ணெய் செடியை அதிகளவிலான விவசாயிகள் ஆர்வத்துடன் பயிர் செய்து வருகின்றனர். மாவட்டத்தில் கரும்பு, மணிலா, உளுந்து செடி, பப்பாளி மரம், எள் உள்ளிட்ட பல்வேறு வகையான பயிர்களை விவசாயிகள் ஊடுபயிராக சாகுபடி செய்து வருகின்றனர்.
பாமாயில் செடிகளுக்கிடையே ஊடு பயிர் செய்யும் முறையால் கூடுதல் வருவாய் கிடைப்பதால் பெரும்பாலான விவசாயிகள் இம்முறையை பயன்படுத்தி வருகின்றனர்.
விழுப்புரம் அடுத்த சூரப்பட்டு கிராமத்தில் விவசாயி ஒருவர் தனது 3 ஏக்கர் நிலத்தில் பாமாயில் செடிகளை பயிரிட்டுள்ளார். இந்த நிலத்தில் ஊடுபயிராக சாகுபடி செய்துள்ள எள் செழித்து வளர்ந்து, அறுவடைக்கு தயாராக உள்ளது.

## வறட்சியை தாங்கி, நோயைக் கட்டுப்படுத்த சிறுதளை விதைப்பு செய்ய வேண்டுகோள்

பதிவு செய்த நாள் : மே 15,2012,02:14 IST

விழுப்புரம் : பயறு வகைப் பயிர்கள் வறட்சியை தாங்கி, நோய்களை கட்டுப் படுத்த விவசாயிகள் சிறுதளை விதைப்பு செய்ய வேண்டும் என உதவி வேளாண்மை அலுவலர் வீராசாமி தெரிவித்துள்ளார்.
கோலியனூர் வட்டாரத் தோட்டக்கலை துறை மூலம் தானே புயலால் பாதித்த விவசாயிகளுக்கு இலவச பாசிப்பயிறு விதை மற்றும் சிறுதளை வழங்கும் விழா பி.டி.ஓ., அலுவலகத்தில் நடந்தது. கோலியனூர் தோட்டக்கலை துறை உதவி வேளாண்மை அலுவலர் வீராசாமி தலைமை தாங்கினார். விழாவில் தானே புயலால் பாதித்த விவசாயிகளுக்கு ஒரு லட்சத்து 68 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான இலவச பாசிப்பயிறு விதை மற்றும் சிறுதளைகள் வழங்கி அவர் பேசியதாவது:
தானே புயல் காரணமாக பல்லாண்டு பயிர்களில் மண்ணில் ஏற்பட் டுள்ள சத்து மற்றும் மகசூல் இழப்பு காரணிகளை சீர் செய்திட அரசு சார்பில் இலவச பயறு வகை விதைகள் வழங்கப்படுகின்றன. எதிர் வரும் மழை ஈரத்தை பயன்படுத்தி விதைப்பு செய்திட இலவச பச்சை பயிறுடன் ரைசோபியம் நுண்ணுயிர்கள் மற்றும் பாஸ்போக பேக்டிரியா நுண்ணுயிர் பொட்டலங்கள் வழங்கப்படுகின்றன. இந்த நுண்ணுயிர் பொட்டலங்களை அரிசி கஞ்சியுடன் கலந்து, அதில் விதைகளை நனைத்து நிழலில் உலர்த்த வேண்டும்.
இவ்வாறு தயார் செய்யப்பட்ட விதைகள் வயலில் விதைக்கும் போது மண்ணில் கார அமிலத் தன்மையை சீர் செய்வதோடு மண் வளத்தையும் கூட்டுகிறது. இந்த முறையில் விதைப்பு செய்வதால் தோட்டப் பயிர்களான முந்திரி, மா, கொய்யா, சப்போட்டா போன்றவைகளின் வளர்ச்சியினை ஊக்குவிக்கிறது. மேலும் பயிர்களுக்கு வறட்சியை தாங்கும் திறனை

அதிகரிப்பதுடன் மண் மூலம் பரவும் நோய்களையும் கட்டுப்படுத்துகின்றன. எனவே விவசாயிகள் சிறுதளை விதைப்பு செய்ய வேண்டும்.

## செவ்வந்தி விளைச்சல் அதிகரிப்பு பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் : மே 15,2012,03:34 IST

பெத்தநாயக்கன்பாளையம்:பெத்தநாயக்கன்பாளையம் பகுதியில், வாசனை மிகுந்த செவ்வந்தி பூக்கள் விளைச்சல் அதிகரித்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.ஆத்தூர் அருகே நரசிங்கபுரம், தலைவாசல், வீரகனூர், பெத்தநாயக்கன்பாளையம், ஏத்தாப்பூர், புத்திரகவுண்டன்பாளையம், தும்பல், பாப்பநாயக்கன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில், குண்டு மல்லிகை, சன்ன மல்லிகை, ஜாதி மல்லிகை, கனகாம்பரம், துலுக்க சாமந்தி எனும் பந்து பூக்கள் அதிகளவில் சாகுபடி செய்து வருகின்றனர்.

அதன்படி, பெத்தநாயக்கன்பாளையம் பகுதியில், செவ்வந்தி பூக்கள் அதிகளவில் சாகுபடி செய்து வருகின்றனர். இவ்வகை பூக்கள், வாசனை திரவியம் (சென்ட்) தயாரிப்புக்கு பயன்படுவதால், கணிசமான விலை கிடைத்து வருகிறது. வாசனை மிகுந்த செவ்வந்தி பூக்கள், விளைச்சல் அதிகரித்துள்ளதோடு மட்டுமின்றி கிலோ, 30 ரூபாய் வரை விற்பதால், விவசாயிகளுக்கு கணிசமான வருவாய் கிடைக்கிறது. கோவில் திருவிழா காரணமாக, ஸ்வாமிக்கு அலங்காரம் செய்வதற்கு செவ்வந்தி பூக்கள் அதிகளவில் பயன்படுவதால், விலை உயர்ந்து வருகிறது.அதனால், பந்து பூ பயிர் செய்துள்ள விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.இது குறித்து விவசாயி முருகன் கூறியதாவது:

குண்டு மற்றும் சன்ன மல்லிகை பூக்கள், குறிப்பிட்ட பருவ காலத்துக்கு மட்டுமே விளைச்சல் இருக்கும். ஆனால், செவ்வந்தி பூக்கள், எப்போதும் விளைச்சல் இருப்பதோடு, ஸ்வாமி உள்ளிட்ட சுப, துக்க நிகழ்ச்சிகளுக்கு மாலைகளாக தொடுக்கப்படும்.

இவ்வகை பூக்களுக்கு, எப்போதும் வரவேற்பு இருப்பதால், தினமும் வருவாய் கிடைக்கிறது. ஏக்கருக்கு, தினமும், 20 கிலோ வரை பூக்கள் கிடைக்கும்.

வாசனை திரவியம் எனும் சென்ட் தயாரிப்புக்கு, வாசனை மிகுந்து காணப்படும் மல்லிகை, செவ்வந்தி பூக்கள் அதிகளவில் பயன்படுவதால், நல்ல வரவேற்பு இருந்து வருகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

## சாகுபடிக்கு வழியின்றி விவசாயிகள் தவிப்பு

பதிவு செய்த நாள் : மே 15,2012,02:19 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: மஞ்சள் சாகுபடி செய்த விவசாயிகள் கடும் நஷ்டத்தில் உள்ளதால், அடுத்த பயிர் சாகுபடிக்கு மூலதனமின்றி தவிக்கின்றனர்.மஞ்சளுக்கு அதிக விலை கிடைக்கும் என்ற ஆசையில், ஈரோடு மாவட்டத்தில் சென்றாண்டு, மஞ்சள் சாகுபடி செய்வோர் எண்ணிக்கை இரட்டிப்பாகி, 28 ஆயிரம் ஏக்கர் வரை மஞ்சள் பயிரிடப்பட்டது. எதிர்பாராதவிதமாக மஞ்சள் விலை கடும் வீழ்ச்சி கண்டு, குவிண்டால், 3,500 - 4,000 ரூபாயாக சரிந்துள்ளது.

ஏக்கருக்கு, 1.25 லட்சம் ரூபாய் வரை செலவு செய்து அறுவடைக்கு காத்திருந்த விவசாயிகளுக்கு கடும் அதிர்ச்சி ஏற்பட்டது. மூலதனத்தில், 50 சதவீதம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.மஞ்சள் சாகுபடியில், 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இதில், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சிறு விவசாயிகள். இவர்களால் வாங்கிய கடனை அடைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது, கரும்பு, நெல் போன்ற அடுத்த பயிர் சாகுபடி காலம் துவங்கிய நிலையிலும், மூலதனமின்றி செய்தவறியாது விவசாயிகள் தவிக்கின்றனர்.ஓரளவு தாக்குபிடிக்க முடிந்த பெரு விவசாயிகளும், கரும்பு ஆலைகள், பயிர்க் கடன் போன்றவற்றை பெற முடிந்த விவசாயிகளும் அடுத்த சாகுபடி பணியை மெதுவாக துவக்கி வருகின்றனர். மஞ்சள் சாகுபடியில் பெருத்த நஷ்டம் அடைந்த குத்தகை விவசாயிகள், சிறு விவசாயிகள் பலர் கூலி வேலைக்கு செல்லத் துவங்கி விட்டனர்.

விவசாய சங்கப் பிரதநிதிகள் கூறுகையில், ""மஞ்சள் விலை வீழ்ச்சியினால் ஈரோடு மாவட்டத்தில் ஏராளமான விவசாயிகள் கடனாளிகளாக மாறியுள்ளனர். வாழ்வாதாரத்துக்கு வழியின்றி பலர் தவிக்கின்றனர். ஓரளவு தாக்குப்பிடிக்க முடிந்தவர்கள் மட்டும் அடுத்த பயிர் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். விவசாயிகளின் நிலையைக் கருத்தில் கொண்டு உடனடியாக உரிய நிவாரணங்களை அளிக்க, அரசு முன் வர வேண்டும்,'' என்றனர்.

---

தினகரன்

## 30 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்

பதிவு செய்த நேரம்:2012-05-14 15:59:13

ஆத்தூர் புதுப்பேட்டையில் உள்ள வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரம்தோறும் சனிக்கிழமை மஞ்சள் ஏலம் நடைபெறுவது வழக்கம். நேற்று முன்தினம் நடைபெற்ற ஏலத்தில் பெரம்பலூர், கடலூர், விழுப்புரம், நாமக்கல், சேலம் மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகளால் 1400 மூட்டை மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இந்த மஞ்சளை பொள்ளாச்சி, திருச்சி, சேலம், திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் ஞி30 லட்சத்திற்கு ஏலம் எடுத்தனர்.
விலை விபரம்: உருண்டை ரகம் குவிண்டாலுக்கு ஞி2800 முதல் ஞி3789 வரையிலும், விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு ஞி3009 முதல் ஞி4689 வரையிலும் விற்பனையானது. கடந்த வார விலையை விட இந்த வாரம் மஞ்சள் குவிண்டால் ஒன்றுக்கு ஞி300 வரை குறைவாக விற்பனையானதால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்தனர்.

---

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## *உணவு பொருள் விலை உயர்வால், ஏப்ரல் மாதத்தில் பணவீக்கம் 7.23 சதவீதமாக உயர்ந்தது*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி*

*உணவு பொருள் விலை உயர்வால், சென்ற ஏப்ரல் மாதத்தில், மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பொது பணவீக்கம் 7.23 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, மார்ச் மாதத்தில் 6.89 சதவீதமாகவும், பிப்ரவரியில் 7.36 சதவீதமாகவும் (மறு மதிப்பீட்டின்படி) இருந்தது.*

*காய்கறி*

*மார்ச் மாதத்தில் காய்கறி விலை, சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 30.57 சதவீதம் உயர்ந்து இருந்தது. இது, ஏப்ரல் மாதத்தில் இதைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகரித்து 60.97 சதவீதமாக உயர்ந்துள்ளது. உருளைக்கிழங்கு விலை 53.44 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், வெங்காயம் விலை 12.11 சதவீதம் குறைந்துள்ளது.*

*ஏப்ரல் மாதத்தில் பருப்பு வகைகள் விலை 11.29 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், பால் விலை 15.51 சதவீதம் அதிகரித்துள்ளது. அரிசி மற்றும் தானியங்கள் விலை முறையே 5.68 சதவீதம் மற்றும் 5.8 சதவீதம் உயர்ந்துள்ளது. முட்டை, மீன், இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை 17.54 சதவீதம் அதிகரித்துள்ளது.*

*உணவு பொருள்கள்*

*பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் 14 சதவீத பங்களிப்பை பெற்றுள்ள உணவு பொருள் பணவீக்கம் ஏப்ரலில் 10.49 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது, மார்ச் மாதத்தில் 9.94 சதவீதமாக இருந்தது. மேலும், எரிபொருள் பணவீக்கமும் 10.41 சதவீதத்திலிருந்து 11.03 சதவீதமாகவும், முதன்மை பொருள்கள் பணவீக்கம் 9.62 சதவீதத்திலிருந்து 9.71 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது.*

*இரும்பு, சமையல் எண்ணெய் உள்ளிட்ட உற்பத்தி பொருள்கள் பணவீக்கம் 4.87 சதவீதத்திலிருந்து 5.12 சதவீதமாகவும், உணவு சாரா பொருள்கள் பணவீக்கம் 1.61 சதவீதமும் உயர்ந்துள்ளது.*

*கடந்த 2010 டிசம்பரிலிருந்து 2011–ஆம் ஆண்டின் இறுதி வரை பொது பணவீக்கம் 9 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தது. இதனை கட்டுப்படுத்தும் வகையில் பாரத ரிசர்வ் வங்கி 2010 மார்ச் மாதத்திலிருந்து 2011 அக்டோபர் வரையிலான 20 மாத காலத்தில் முக்கிய கடன்களுக்கான வட்டியை 13 முறை உயர்த்தியது. இதன் காரணமாக, வங்கிகள் கடனிற்கான வட்டியை உயர்த்தியதையடுத்து, நாட்டின் தொழில்துறை மற்றும் பொருளாதார வளர்ச்சி வேகம் குறைந்தது.*

*இதனையடுத்து, பணப்புழக்கத்தை அதிகரிக்கும் வகையில், வங்கிகளுக்கான ரொக்க இருப்பு விகிதத்தை மொத்தம் 1.25 சதவீதம் குறைத்தது. இதன் காரணமாக, வங்கிகளுக்கு கூடுதலாக ரூ.80,000 கோடி கிடைத்தது.*

*தொழில்துறை உற்பத்தி*

*சென்ற ஏப்ரல் 17–ந் தேதி அன்று மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு முக்கிய கடன்களுக்கான வட்டியை ரிசர்வ் வங்கி 0.50 சதவீதம் குறைத்தது. இந்நிலையில், இவ்வாண்டு மார்ச் மாதத்தில் நாட்டின் தொழில்துறை உற்பத்தியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. 2011 மார்ச்சில் 9.4 சதவீதம் அதிகரித்து இருந்த தொழில்துறை உற்பத்தியில், இவ்வாண்டு மார்ச் மாதத்தில் 3.5 சதவீதம் சரிவு ஏற்பட்டுள்ளது. 2011 அக்டோபர் மாதத்திற்கு பிறகு தற்போதுதான் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.*

*டிசம்பர் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் 6.1 சதவீதமாக மிகவும் சரிவடைந்துள்ளது. ஆக, பொருளாதார வளர்ச்சி வேகம் குறைந்து வரும் நிலையில், ஏப்ரல் மாதத்தில் பணவீக்கம் 7.23 சதவீதமாக உயர்ந்துள்ளது.*

*நிதி அமைச்சர்*

*குறிப்பாக உணவு பணவீக்கம் உயர்ந்து வருவதை கட்டுப்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக நிதி அமைச்சர் பிரணாப்*

முகர்ஜி தெரிவித்துள்ளார். சேமிப்பு கிடங்கு வசதிகளை மேம்படுத்தும் வகையிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
அமெரிக்க டாலருக்கு எதிராக ரூபாய் மதிப்பு சரிவடைந்து வருவதால், கச்சா எண்ணெய் இறக்குமதி செலவினம் அதிகரித்து பணவீக்கம் மேலும் உயர வாய்ப்புள்ளது.
ஆக, பணவீக்கம் அதிகரித்துள்ளதால், தொழில்துறை உற்பத்தியில் பின்னடைவு ஏற்பட்டுள்ள நிலையிலும், பாரத ரிசர்வ் வங்கி வரும் ஜூன் மாதம் வெளியிடும் பணக் கொள்கை ஆய்வு அறிக்கையில் முக்கிய கடன்களுக்கான வட்டியை குறைக்காது என எதிர்பார்க்கப்படுகிறது.
பணவீக்கம் குறித்த செய்தி வெளியானதையடுத்து, திங்கள்கிழமை அன்று பங்கு வியாபாரத்தில் பாதிப்பு ஏற்பட்டது.

**குன்னூர் ஏல மையத்தில் 96 சதவீத தேயிலை தூள் விற்பனை**

குன்னூர், மே.15–
குன்னூர் தேயிலை ஏலத் தில் 96 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.
தேயிலை ஏலம்
குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் குன்னூர் தேயிலை ஏல மையத்தில் வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய இரு நாட்கள் தேயிலை ஏலம் நடக்கிறது. விற்பனை எண் 19–க்கான ஏலம் கடந்த 10, 11 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.
ஏலத்திற்கு மொத்தம் 9 லட்சத்து 18 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 6 லட்சத்து 58 கிலோ இலை ரகமாகவும், 2 லட்சத்து 60 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாக வும் இருந்தது.
தேயிலையின் வரத்து குறைவு என்பதால் தேயிலைக்கு தேவை அதிகரித்து இருந்தது.
96 சதவீதம் விற்பனை
இதனால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் ஏலத்தில் ஆர்வமுடன் பங்கு பெற்றனர். மொத்த தேயிலை தூளின் அளவில் 96 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது.
இதன் காரணமாக ரூ.2 விலை உயர்வு ஏற்பட் டது.
சி.டி.சி. தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக ரூ. 185க்கு ஏலம் சென்றது. கம்பெனி தேயிலை எஸ்டேட் டுகள் தயாரிக்கும் ஆர்தோ டக்ஸ் தேயிலை தூள் உயர்ந்த பட்ச விலையாக ரூ.301க்கு ஏலம் சென்றது.
அடுத்த ஏலம்
சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை ரூ. 50–ல் இருந்து ரூ.56 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.95–ல் இருந்து ரூ.157 வரை யிலும் ஏலம் சென்றது.
டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை ரூ. 64–ல் இருந்து ரூ.67–ல் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ. 90–ல் இருந்து ரூ.162 வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 20–க்கான ஏலம் வருகிற 17, 18 ஆகிய தேதிகளில் நடக் கிறது. ஏலத்திற்கு மொத்தம் 8 லட்சத்து 90 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.